**53 கீரனைக் கரயேற்றிய படலம்**

நக்கீரன் இல்லாத புலவர் சங்கம் ஞானமில்லாத கல்வி போன்றது என்ற உணர்ந்த சங்கப்புலவர்கள், எம்பிரானையல்லவா நக்கீரன் எதிர்த்துள்ளான், ஆதலால் ஐயன் அருளினால் தான் இந் நிலைமை சீர்படும் என்று உணர்ந்து ,ஐயன் திருவடியில் வீழ்ந்து நக்கீரன் மன்னித்தருள வேண்டினர்.

சோமசுந்தரர்மீனாட்சிஅம்மையுடன்புலவர்கள்தொடரபொற்றாமரைக் கரைக்குவந்தார். சுட்டெரிக்கும் நெற்றிக் கண்ணால் நோக்கிய ஐயன் நக்கீரனை தற்போது அருட் கண்ணால் நோக்கினார். ஞானப் பூங்கோதை கூந்தலுக்கு பழுதுச் சொன்ன தன்னை எம்பிரான் அன்றி வேறுயார் பொருத்தருளுவார் என்றெண்ணிய நக்கீரன் திருக்காளியப்பர் மீது நேரிசை வெண்பாவினால் கைலைபாதி காளத்திபாதி அந்தாதி பாமாலை பாடினார் அந்த அந்தாதியை கேட்ட ஐயன் நேரில் வந்து கைப்பிடித்து நக்கீரனை கரையேற்றினார்.

பிறவிப் பெருங்கடலினின்று தன்னைக் கரையேற்றிய அம்மையப்பனை போற்றி வணங்கி கோபப்பிரசாதம், திருவொழுகூற்றிருக்கை பெருந்தேவபாணி என்னும் பாமாலைகள் பாடிவழிப்பட்டான்நக்கீரன். சங்கப்புலவர்களும் தங்களது கவிகளால் ஐயனை வாழ்த்தினர்.

சோமசுந்தரக் கடவுள் நக்கீரனை முன் போலவே புலவர் கூட்டத்துள் இருக்கச் செய்து மீனாட்சி அம்மையோடு திருக்கோயிலினுள் சென்றுமறைந்தார் .பின்பு நக்கீரனும் மற்ற புலவர்களும் பொற்கிழி யை அறுத்து தருமிக்குஅளித்தனர்.

**பல்லவி**

சங்க புலவர்கள் வருந்தி உன்னை வேண்ட
செருக்குள்ள நக்கீரனை அருட் கண்ணால் நோக்கினீர்

**அனுபல்லவி**

அங்கே கைலைபாதி காளத்திபாதி அந்தாதி
பாடிய நக்கீரரைகைப் பிடித்து கரையேற்றினீர்

**சரணம்**

கோப ப்ரசாதம் என்னும் பாமாலை கீரன் புனைந்து
கோயில் கொண்டுள்ள சோமநாதனை வாழ்த்தினான்
கோபம் நீங்கியதும் தருமிக்கு பொற் கிழியைத்
தரச் செய்து கீரனை மீண்டும் சங்கப் புவரில் சேர்த்தீர்